# உயர்ந்த அன்பு எது

உயர்ந்த அன்பு எது நண்பனுக்காக உயிரைத் தருவது தான்
அந்த அன்பில் வளர்வது (உயர் மானிடப் பண்பு -2) -( 2 )
தன்னையே தந்த தலைவன் அந்த இறைவனே நல்ல நண்பன் -( 2 )
உயர்ந்த அன்பு எது

**1**
சொந்த பந்தங்கள் எல்லாம் நல்லுறவாய் நிலைத்திடுமோ-எம்மை
துயரங்கள் சூழ்ந்திடும் போது - அந்த உறவுகள் உதவிடுமோ (2)
காலங்கள் கடந்து சென்றாலும் - உன்னை காரிருள் சூழ்ந்து நின்றாலும் (2)
நிலைத்த அன்பாகி விழியில் சுடராகி நண்பனே வாழ்கிறான் ....
உயர்ந்த அன்பு எது...

**2**
இன்ப துன்பங்கள் எல்லாம் இந்த நட்பினில் பொதுவுடமை
உளப் பகிர்தலில் உயர்ந்திடும் உறவே அந்த அன்பின் தனிப் பெருமை (2)
பெறுவதில் மலர்ந்திடும் அன்பு - தன்னை தருவதில் துலங்கிடும் பண்பு (2)
நண்பன் வேண்டுமா அன்பில் நிலைத்திடு நண்பனாய் மாறிடு
உயர்ந்த அன்பு எது..